[1980 பிப்ரவரி 5]

திருப்பாலைக்குடிக்குத் தண்ணீர் வழங்கல்.

*வினா எண். 50— திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், திருவாடானை தாலுகா, திருப்பாலைக்குடிக்கு ரூ. 16,000 செலவில் ஆர். எஸ். மங்கலம் பாண்டியன் கிணற்றிலிருந்து சப்ளை 20–12–1978 ல் விடப்பட்டு மீண்டும் 24–12–1978 தேதி நிறுத்தப்பட்டதா?

(ஆ) மீண்டும் தண்ணீர் விட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) உடைந்து போயிருந்த பைப்லைனின் பகுதி பழுது பார்க்கப்பட்டு 24–7–79-ம் தேதியிலிருந்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் திருவாடானை தாலுகாவில் 20–12–78 ல் அன்று விடப்பட்டு 24–12–78 அன்று நிறுத்தியதற்குக் காரணம் என்ன? எதன் மூலம் மீண்டும் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் மூலக் கேள்வியின் பதிலிலே குறிப்பிட்டதுபோல மங்கலம் கிராமத்திற்குப் பக்கத்தில் பைப்லைன் உடைந்து போய் இருந்தது என்றும் அது பழுது பார்க்கப்பட்டு திருப்பாலைக் குடிக்குத் தண்ணீர் விடப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

சிவகாசி நகரைச் சுற்றி புதிய தொழிற்சாலைகள்.

*வினா எண் 51 — திரு. கோ. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி நகரைச் சுற்றி 5 கிலோமீட்டர் வரை தொழிற்சாலை விஸ்தரிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் இதனால் சுற்றுப்புற கிராமங்கள் பாதிக்கப் பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(இ) இந்த விதிகளைத் தளர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?